# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4

## முதலாம் தவணைப் பரீட்சை – 2016

## தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் - 06

சுட்டெண்:................................ நேரம் : 1 ½ மணி

பகுதி I

**01. மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. "கொடுமை செய் கூற்றுவன் போல வந்து கூவினதேயொரு பொல்லாப் பிராணி" இங்கு வரும் கூற்றுவன் என்பதன் பொருள்.
 1) கடவுள் 2) இயமன் 3) உறவினர் 4) சகோதரன்

02. "இறைவன் இந்த அகிலத்தை காத்து நிற்கின்றார்." இவ்வாக்கியத்தில் வரும் அகிலம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
 1) மரம் 2) வீடு 3) உலகம் 4) வாழ்க்கை

03. ஆழி, ஆளி, ஆலி ஆகிய சொற்களின் பொருளை ஒழுங்கு முறையில் தரும் விடைத்தொகுதி
 1) கடல், சிங்கம், மழைத்துளி
 2) சிங்கம், கடல், மழைத்துளி
 3) மழைத்துளி, கடல், சிங்கம்
 4) சிங்கம், மழைத்துளி, கடல்

04. குரங்கு .......................... க்கூட்டிற்கு கல் எறிந்தது. இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான சொல்
 1) குலவி 2) குளவி 3) குழவி 4) குலாவி

05. எலியும் சேவலும் என்ற கதைப் பாடலை எழுதியவர்.
 1) மகாகவி பாரதியார் 2) பாரதிதாசன்
 3) விபுலானந்தர் 4) நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

06. "இராமனோடு சீதை வந்தாள்" என்ற வாக்கியத்தின் எழுவாய்
 1) இராமன் 2) சீதை 2) வந்தாள் 4) இராமனோடு

07. உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
 1) 247 2) 18 2) 216 4) 12

08. "பாரதியார் ஒருசிறந்த புலவர்" என்ற வாக்கியத்தின் பயனிலை
 1) பாரதியார் 2) புலவர் 2) சிறந்த 4) ஒரு

09. பறவைகள் கூட்டம் கூட்டமாக................
 1) பறந்தது 2) பறந்தார்கள் 3) பறந்தன 4) பறக்கின்றது

10. தம்பி என்ற சொல் உணர்த்தும் இலக்கணக்கூறு
 1) அ∴றிணை, ஆண்பால், ஒருமை
 2) உயர்திணை, ஆண்பால், பன்மை
 3) உயர்திணை, ஆண்பால், ஒருமை
 4) அ∴றிணை, ஆண்பால், பன்மை

(10×2=20 புள்ளிகள்)

**02. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1) ஆண் குரங்கினையும் பெண் குரங்கினையும் எவ்வாறு அழைப்பர்?
……………………………………………………………………………………………..
……………………………………………………………………………………………..

2) உயிர் எழுத்துக்களில் குறில் எழுத்துக்கள் எத்தனை? அவற்றைக் குறிப்பிடுக
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

3) வல்லின மெய்களைக் குறிப்பிடுக.
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

4) “அக்கா அழகாகப் பாடினாள்” என்ற வாக்கியத்தில் வந்துள்ள சொற்றொடர்களைக் குறிப்பிடுக.
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

5) எமது உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

(5×2=10 புள்ளிகள்)

**03. பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.**

1) ஒரு எழுவாயையும் ஒருபயனிலையையும் கொண்ட வாக்கியங்களை ………………………… என அழைப்பர்.
2) மூவிடப் பெயர்களில் பேசுவோனைக் குறிக்கும் பெயர்……………………………….. எனப்படும்.
3) சேய் எலி, ……………………………… தோற்றத்தை பார்த்து பயந்து, தாய் எலியிடம் ஓடியது.
4) நல்ல ஊட்டச்சத்து நிறைந்து, உடல் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும் உணவினை ……………………………………என்பர்.
5) ஒரு வாக்கியத்தின் கருத்து முற்றுப்பெறும் இடத்தினை……………………………………என்பர்.

(5×1=5 புள்ளிகள்)

**04. சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

1) தமிழ் நெடுங்கணக்கில் மொத்தம் 247 எழுத்துக்கள் உள்ளன. (   )
2) சொற்கள் ஒன்றிணைந்தால் அதனை வாக்கியம் என்பர். (   )
3) கடிதத்தின் முடிவில் முகவரி இடப்படும். (   )
4) ஈ∴பண்டி நல்ல உள்ளம் கொண்டவன். (   )
5) நான் என்பது தன்மை ஒருமைப் பெயராகும். (   )

(5×1=5 புள்ளிகள்)

# பகுதி II

**முதலாம், இரண்டாம் வினா உட்பட, ஏனைய வினாக்களில் மூன்றினைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. உமது வகுப்பறையில், தமிழ்மொழிப் பாடத்தில் நடைபெற்ற ''வாசிப்பு'' எனும் கணிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) வாசிப்பு எனும் கணிப்பீட்டிற்காக உமக்கு வழங்கப்பட்ட பகுதியினைக் குறிப்பிடுக.
2) இக்கணிப்பீட்டிற்காக உமக்கு ஆசிரியர் வழங்கிய அறிவுறுத்தல்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
3) கணிப்பீட்டின்போது நீர் எதிர்கொண்ட பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக.
4) அப்பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு கண்டீர் என்பதை தெளிவுறுத்துக.
5) இந்தக் கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் மூன்றினைத் தருக.

(2+3+4+4+3=16 புள்ளிகள்)

**02. பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாதவாறு கட்டுரை எழுதுக.**

1) நல்ல உணவும் ஆரோக்கியமான வாழ்வும்
2) வாசிப்பினால் ஏற்படும் நன்மைகள்
3) மாணவர்களும் விழுமியப் பண்புகளும்
4) எனக்கு சிறகு முளைத்தால்…..

(14 புள்ளிகள்)

**03. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) எலியும் சேவலும் என்ற கதைப் பாடலில் தாய் எலி, சேய் எலிக்கு கூறிய அறிவுரைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
2) குரங்கின் சேட்டையாகக் கூறப்படும் விடயங்கள் யாவை?
3) காக்கையிடம் காணப்பட்ட நல்ல பழக்கம் ஒன்றையும் தீய பழக்கம் ஒன்றையும் கூறுக.
4) செல்வந்தன் ஊர் மக்களுக்கு எவ்வாறு துன்பம் செய்தான்?
5) தந்தை மகனுக்கு எழுதிய கடிதத்தில் கூறப்படும் முதுமொழி யாது?

(5×2=10 புள்ளிகள்)

04. பரீட்சையில் முதலிடம் பெற்ற உமது நண்பனைப் பாராட்டி 75 சொற்களில் அமையக் கூடியவாறு கடிதம் ஒன்று எழுதுக.

(10 புள்ளிகள்)

**05. பின்வரும் சொற்களின் பொருள் வேறுபாட்டிற்கமைய வாக்கியம் அமைத்துக் காட்டுக.**

1) அன்னம்
2) அண்ணம்
3) அரி
4) அறி
5) ஆனை

(5×2=10 புள்ளிகள்)

**06. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| எழுத்து | எழுத்து உருவாகும் விதம் | குறில் / நெடில் |
|---|---|---|
| (உ+ம்) வா | வ் +ஆ | நெடில் |
| டு | .......................... | .......................... |
| கோ | .......................... | .......................... |
| மை | .......................... | .......................... |
| கௌ | .......................... | .......................... |
| செ | .......................... | .......................... |

(10×1=10 புள்ளிகள்)

07. பின்வரும் வாக்கியங்களில் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. அவற்றினைத் திருத்தி மீண்டும் எழுதுக.

1) இன்ரு காற்றுடன் மலை பெய்தது.
2) உடல் அரோக்கியத்துக்கு ஊட்டச்சத்துள்ள உனவு அவசியம்.
3) அக்கா ஒரு அளகான கவிதை எளுதினாள்.
4) அவன் ஒரு சிரந்த மானவன்.
5) ஆசிரியர்கள் பாடசாளைக்குச் சென்றனர்.

(10×1=10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education